சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 23.08.2018

# அவசரக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் ஆவணி மாதம் 07–ம் நாள் (ஆகஸ்ட் திங்கள் 23–ம் நாள்:–23.08.2018) வியாழன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 30.07.2018ம் தேதியிட்ட அரசாணை எண்.76ன்படி, இந்நகராட்சியில் 01.04.2018 முதல் பொது சொத்துவரி சீராய்வு (Questionnaire Revision) மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிக்காக சொத்துவரி திருத்தம் தொடர்பான ஒருங்கிணைக்கப்பட்ட சுயமதிப்பீட்டுப் படிவம் வரிவிதிப்பு கணக்கிட்டுப் படிவம் இந்திய தேசிய நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வீஸ், திருச்சிராப்பள்ளி மூலம் குடியிருப்பு படிவம் 15000 எண்ணிக்கைகள் மற்றும் வணிக படிவம் 5000 எண்ணிக்கைகள் தொழிற்கூடம் படிவம் 500 எண்ணிக்கைகள் அச்சிட்டு பெறவும், வரி திருத்தம் தொடர்பான அறிக்கைகளை தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யவும், மேலும் வரிவிதிப்புதாரர்களுக்கு ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்தல் போன்ற செலவினங்களுக்காக உத்தேச செலவு ரூ.300000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண், நாள்** **448, நாள்.23.08.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சொத்துவரி பொது சீராய்வு தொடர்பாக 01.04.2018 முதல் அமுல்படுத்த தெரிவித்து வரப்பெற்ற அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018ல் கீழ்கண்ட விகிதாச்சார அடிப்படையில் சொத்துவரி உயர்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பயன்பாடு | உயர்வு செய்யப்பட வேண்டிய விகிதாச்சாரம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100% மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100% மிகாமல் |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ள விகிதாச்சார அடிப்படையில் 01.04.2018 முதல் சொத்துவரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3132/2018/அ1)**
**தீர்மான எண், நாள்** **449, நாள்.23.08.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கையாக கொசுக்களை ஒழிக்கத் தேவைப்படும் அபேட் மருந்து (Temiphoss 50% EC) நகராட்சியில் போதிய இருப்பில் இல்லாததால் 100 லிட்டர் அபேட் மருந்தை தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை மையம் (TNMS) அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மூலம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று மருந்து வாஙகுவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3299/2018/எச்1)

**தீர்மான எண், நாள்** **450, நாள்.23.08.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கையாக வீடுகளில் உள்ள டெங்கு கொசுக்களை கை புகை மருந்து இயந்திரம் மூலம் (Hand Fogging Machine) இயக்குவதற்கு பயன்படுத்தப்படும் கேஸ் சிலிண்டர் (gas cylinder) நகராட்சியில் இருப்பு குறைவாக உள்ளதால் டெங்கு தடுப்பு பணியின் அவரச அவசியம் கருதி 300 எண்ணம் சிலிண்டர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.1,25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினம் நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம். (ந.க.எண்.3300/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **451, நாள்.23.08.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரம் ஆகும் குப்பைகளை சேகரித்து எடுத்துச் செல்லும் டம்பர் பிளேசர் வாகனத்திற்கான பெட்டிகள் 15 எண்ணம் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட பெட்டிகளை சரிசெய்து மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளதால் அதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.90,000/– நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம். (ந.க.எண்.3305/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **452, நாள்.23.08.2018**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் டெங்குநோய் தடுப்பு நடவடிக்கைக்காக கொசுக்களை ஒழிக்க புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (Fogging Machine) கொண்டு அடிக்க தேவையான மருந்து பைரத்ரீம் நகராட்சியில் போதிய இருப்பு இல்லாததால் வருங்கால தேவைக்காக 100 லிட்டரை தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை மையம் (TNMS) மூலம் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினம் நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**
**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று மருந்து வாங்குவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3298/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **453, நாள்.23.08.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் இரவுக்காவலர்கள் RCH பணியாளர்களுக்கு 2018–19 ஆம் ஆண்டிற்கான இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கிடவும், மேலும் அதற்கான தையல் கூலி வழங்கிடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினம் நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம். (ந.க.எண்.5514/2010/எச்1)**

**தீர்மான எண், நாள்** **454, நாள்.23.08.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகன எண்.TN60Z2921 டிராக்டர் 2018–19 ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று பெற வேண்டி வண்டியில் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.90,000/–க்கு 16.08.2018 ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | நேஷனல் பாடி பில்டிங் லேத் ஒர்க்ஸ், சின்னமனூர் | 92650/– |
| 2 | சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் | 89,000/– |

**அலுவலகக் குறிப்பு:–**
1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **455, நாள்.23.08.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சியின் குடிநீர் லாரி வாகனம் எண்.TN60S3761க்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.61500/—க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்வதை ஏற்கலாாம.

தீர்மான எண், நாள் 456, நாள்.23.08.2018

தீர்மானம்

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, சாமிகுளம் 2வது தெருவில் கழிவு நீர் கால்வாய் அமைத்து சாலையினை உயர்த்தும் பணி மேற்கொள்ள தொகை ரூ.275000/—க்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— 1.பொது மக்கள் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3193/2018/இ1)

தீர்மான எண், நாள் 457, நாள்.23.08.2018

தீர்மானம்

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சியில் உயிரியல் பல்வகைமை சட்டம் 2002 மற்றும் தமிழ்நாடு உயிரியியல் பல்வகைமை தன்னை விதிகள் 2004 மற்றும் 2017 பிரிவு 201—ன் கீழ், அரசாணை எண்.137 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (FRS) நாள்.09.01.2017ல் அறிவுறுத்தியதற்கிணங்க பல்லுயிர் மேலாண்மை குழு (Bio Diversity Management Committee-BMC) அமைப்பது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— 1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3188/2018/எச்1)

தீர்மான எண், நாள் 458, நாள்.23.08.2018

தீர்மானம்

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில் திரு.காமுத்துரை என்பவர் இறந்ததாகவும் அதற்கு இழப்பீடு கோரி நகராட்சிக்கு எதிராக திருமதி.பாப்பாத்தி க/பெ.லேட் சந்திரன் என்பவர் 10/2013–ன்படி தொழிலாளர் இணை ஆணையம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு குறித்து நீதிமன்ற உத்திரவு வரப்பெற்றது. எனவே அது குறித்து சட்டக்கருத்துரு திரு.கருப்பசாமி பாண்டியன் அரசு வழக்கறிஞர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட வகையில் ஆன செலவினம் ரூ.3000/–யை வழக்கறிஞர் கட்டணமாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.6560/2016/இ2)

**தீர்மான எண், நாள்** 459, நாள்.23.08.2018

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

சொத்துவரி பொது சீராய்வு தொடர்பாக ஏற்கனவே அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018ல் தெரிவித்துள்ளதை கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் செய்ய அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பயன்பாடு | உயர்வு செய்யப்பட வேண்டிய விகிதாச்சாரம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100% மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100% மிகாமல் |

மேற்கண்ட இனங்களில் வரிசை எண்.2ல் உள்ள வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% மிகாமல் என தெரிவிக்கப்பட்டுள்ளதை நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ள விகிதாரச்சார அடிப்படையில் 01.04.2018 முதல் சொத்துவரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3132/2018/அ1)

**தீர்மான எண், நாள்** 460, நாள்.23.08.2018

**தீர்மானம்**

*******